ஜெபம்

CHRISTIAN RESOURCE CENTRE

40, Langerkana Street,

Palayamkottai - 627 002.

Tel: 0462-2576340

THANKS TO OUR ALMIGHTY GOD. MAY GOD BLESS YOU AND MAY HOLY SPIRIT LEAD YOU

To the Readers

Dear Beloved Brother/Sister, Thank you for downloading this Ebook. Please note that this Ebook is copyrighted by the author of the book or the publisher of the book or as mentioned in the book. Word of God Ministries is just providing you this ebook as free of cost and it is for your personal use not for commercial purposes.

To the Copyright Owners

Dear Copyright owners, Word of God Ministries is doing this Free Ebook service to help the people who are not able to find the printed copy of your book from various countries arround the world and to the people who are restricted to have the printed materials in their house. And this will help the readers to improve their spiritual life.

If you want your new books to be published here as Free Ebook, kindly EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489

If you feel that your book should not be published, we are KINDLY REQUESTING YOU TO EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489. We will remove it from our Free Service as early as possible.

WOG

About Word of God Ministries

Word of God Ministries was founded in the year 2007, July 29th with the grace and leading of Almighty God by Bro. Yesudas Solomon as an interdenominational ministry. The popular ministry "**Word of God Team**" is one among our various ministries. Now this ministry has 10 branches such as **1)** Word of God Team, **2)** Mobile Ministry, **3)** Internet Ministry, **4)** Deaf Ministry, **5)** Blind Ministry, **6)** Tribal Ministry, **7)** Computer Ministry, **8)** Audio Ministry, **9)** Video Ministry and **10)** Printing Ministry. We all thank our God with full of our heart for using us in His Great Ministry. We need your continuous prayer support. Our vision is to "Reach the Unreached through Technology". Our websites are: www.WordOfGod.in, www.ChristiansMobile.com, www.FreeChristianEbooks.in, www.IndianBibles.net, www.ChristianAudioBooks.in, www.WordOfGodTeam.com, www.WordOfGodMinistry.in, www.KannadaBible.net, www.KannadaChristian.net, www.PrayForKarnataka.com

ஜெபம் என்றால் என்ன?

நாம் இறைவனின் பிரசன்னத்தை உணர்ந்து அவரோடு பேசுவது ஜெபம் ஆகும். ஜெபத்தில்

1. துதித்தல்
2. பாவ அறிக்கையிடுதல்
3. நன்றி கூறுதல்
4. வேண்டுதல்

ஆகிய நான்கு பகுதிகள் உண்டு

1. துதித்தல்

இறையடியார்கள் உள்ளத்தில் பொங்கி எழும் வார்த்தைகளும் புகழ்ச்சிகளுமே துதித்தல் ஆகும். இறைப்பற்றுள்ள அனைவரிடமும் காணப்படும்

முக்கிய பண்பு இறைவனைப் போற்றித் துதித்தல் ஆகும். வேதத்திலுள்ள ஜெபங்களிலும் இறைவாழ்த்து சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது.

2. பாவ அறிக்கையிடுதல்

பாவ அறிக்கை என்பது நாம் இறைவன் வகுத்த வழியை விட்டு எவ்வளவாகத் தவறியிருக்கிறோம் என்பதை மனதார ஒத்துக்கொள்வதாகும். ஏதாவது ஒரு மறைவான பாவத்தை நாம் அறிக்கையிட்டும் விட்டு விடாமல் இறைவனைத் துதித்தால், அது மாய்மாலமாகும். ஆகவே நமது எல்லாப் பாவங்களையும் இறைவனிடம் அறிக்கை செய்து விட்டுவிட வேண்டும். நமது பாவங் களுக்குரிய தண்டனையை

இறைமைந்தன் இயேசு கிறிஸ்து தம் மீது ஏற்றுக் கொண்டதால், இறைவனின் மன்னிப்பு நமக்குக் கிடைப்பது உறுதி. அவர் பிதாவிடமிருந்து மன்னிப்பை நமக்காகச் சம்பாதித்து வைத்திருப்பதால் நாம் நமது குற்றங்களுக்காக மன்னிப்பைக் கெஞ்சிக் கேட்பது பாவ அறிக்கை ஆகும்.

3. நன்றி கூறுதல்

நமக்கு எவ்விதத் தகுதியும் இல்லையென்றாலும், இறைவன் தமது மிகுந்த இரக்கத்தினால் நாம் கேட்பதற்கு முன்னரே நமக்கு அளவில்லாத ஆசீர்வாதங்களை அருளிச் செய்திருக்கிறார். ஆகவே நாம் இறைவனுக்கு நன்றி செலுத்தக்

கடமைப்பட்டுள்ளோம்.
இறைவனுக்கு நன்றி
செலுத்துவதின் மூலம், எல்லா
நல் ஈவுகளையும் நாம்
அவரிடமிருந்தே பெற்றுக்
கொள்கிறோம் என்பதை ஒத்துக்
கொள்கிறோம்.
மேலும் நம் சுய முயற்சியினால்
எல்லா நன்மைகளையும்
பெற்றுக்கொள்ள இயலாது
என்பதையும் உணர்ந்து
கொள்கிறோம்.

4. வேண்டுதல்

பரலோகத்தில் நமக்கு ஒரு பிதா
இருக்கிறார், அவர் நமது
தேவைகளைச் சந்திக்க வல்லவர்
என்று வேதம் நமக்குப்
போதிக்கிறது. ஆகவே நமது

தேவைகள் சந்திக்கப்பட, நாம்
அவரிடமே கேட்க வேண்டும்.
அவர் சித்தத்தின்படி நாம் எதைக்
கேட்டாலும் அதை அருளிச்
செய்வேன் என்று நம் பிதா
வாக்குக் கொடுத்திருக்கிறார்.
இந்த வாக்கை நம்பி நாம்
நமக்காக மட்டுமல்ல
பிறருக்காவும் வேண்டுதல்
செய்யக் கடமைப்பட்டுள்ளோம்.

சத்திய வேதத்தின் வெவ்வேறு
பகுதியிலிருந்து எடுக்கப்பட்டுள்ள
ஜெபங்கள் இங்கு ஒன்று
சேர்க்கப்பட்டுள்ளன. இவை ஜெபத்தின்
நான்கு பகுதிகளையும் நமக்கு நன்கு
விளக்கும். இந்த ஜெபம் நாம்
ஆண்டவரோடு இன்னும் நெருங்கிச்
சேர உதவும்

துதித்தல்

எங்கள் ஆண்டவராகிய
கர்த்தாவே, உம்முடைய நாமம்
பூமியெங்கும் எவ்வளவு
மேன்மையுள்ளதாயிருக்கிறது!
உம்முடைய நீதி உன்னதமானது,
பெரிதானவைகளை நீர் செய்தீர்.
தேவனே உமக்கு நிகரானவர்
யார்? நீர் பெரியவரும், மிகவும்
துதிக்கப்படத்தக்கவருமாயிருக்கிறீர்.
எல்லாத் தேவர்களிலும்
பயப்படத்தக்கவர் நீரே. நீர்
ஒருவரே கர்த்தர். நீரே
நித்யானந்தமுள்ள ஏக
சக்கராதிபதியும் ராஜாதி ராஜாவும்,
கர்த்தாதி கர்த்தாவும், நித்திய
வாசியும் பரிசுத்தர் என்கிற

நாமமுள்ளவருமாகிய
மகத்துவமும் உன்னதமுமானவர்.
நீர் சேரக்கூடாத ஒளியில் வாசம்
பண்ணுகிறவரும், மனுஷரில்
ஒருவரும் கண்டிராதவரும்
காணக்கூடாதவருமாயிருக்கிறீர்.
நீர் வானங்களையும்,
வானாதி வானங்களையும்,
அவைகளுடைய சர்வ
சேனைகளையும், பூமியையும்
அதிலுள்ள எல்லாவற்றையும்
சமுத்திரங்களையும்
அவைகளிலுள்ள
எல்லாவற்றையும் உண்டாக்கினீர்.
அவைகளையெல்லாம் நீர்
காப்பாற்றுகிறீர். நீர் மிகுதியாய்
மன்னிக்கிறவரும், இரக்கமும்,
மன உருக்கமும், நீடிய சாந்தமும்,
மகா கிருபையுமுள்ளவருமான
தேவன்.

உமக்கே துதியும், மகிமையும்
ஞானமும், ஸ்தோத்திரமும்,
கனமும், வல்லமையும், பெலனும்
சதாகாலங்களிலும் உண்டாவதாக,
ஆமென்.

சங். 8:1, 71:19, 96:4 1தீமோ. 6:15, 16
ஏசா. 57:15, நெகே. 9:6,17, வெளி. 7:12

பாவ அறிக்கையிடுதல்

தேவனே, நாங்கள் பாவஞ்செய்து,
அக்கிரமக்காரராயிருந்து,
துன்மார்க்கமாய் நடந்து,
கலகம் பண்ணி, உம்முடைய
கற்பனைகளையும், உம்முடைய
நியாயங்களையும் விட்டு
விலகிச் சென்றோம். உமது
நாமத்தினாலே எங்களோடு
பேசின உம்முடைய
ஊழியக்காரருக்குச்

செவிகொடாமற் போனோம்.
ஆண்டவரே உமக்கு விரோதமாகப்
பாவஞ்செய்தபடியால் நாங்கள்
வெட்கத்துக்குரியவர்களானோம்.
தானி. 9:5,6,8.
கர்த்தாவே, எங்களுடைய
நீதிகளெல்லாம் அழுக்கான
கந்தைபோல இருக்கிறது.
ஆயினும் மனம் வருந்தி உம்மை
நோக்கி கூப்பிடும்
எங்களைவிட்டுப் போகாதிரும்.
நீர் அக்கிரமங்களைக்
கவனித்திருப்பீரானால்,
யார் நிலை நிற்பான்?
எங்கள் அக்கிரமத்தைப்
பொறுத்து, மீறுதலை மன்னிக்கிற
தேவரீருக்கு ஒப்பான தேவன் யார்?
எங்கள் தேவனாகிய
ஆண்டவரிடத்திலே
இரக்கங்களும், மன்னிப்புகளும்
உண்டு. ஆகவே நீர் கிருபையாக

இரங்கி, எங்கள் பாவங்களையெல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டுவிடுவீராக. மேற்குக்கும், கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாக எங்கள் பாவங்களை எங்களை விட்டு விலக்கி விடுவீராக.

ஏசா. 64:1,6 ஏரே. 14:9, சங்:130:3, மீகா. 7:18,19, தானி. 9:10, சங். 103:12.

தேவனே பாவியாகிய என்மேல் கிருபையாயிரும். தேவனே உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என்மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும். என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும். நீர் என்னை தூய்மைப்படுத்தும். அப்பொழுது நான் சுத்தமாவேன்.

என் பாவங்களைப் பாராதபடிக்கு
நீர் உமது முகத்தை மறைத்து,
என் அக்கிரமங்களையெல்லாம்
நீக்கியருளும். தேவனே, சுத்த
இருதயத்தை என்னிலே
உருவாக்கியருளும்,
நிலைவரமான ஆவியை என்
உள்ளத்திலே புதுப்பியும்.
தூய ஆவியானவர்
என்னைச் செம்மையான
வழியிலே நடத்துவாராக. நீரே
எங்களைச் சீர்படுத்தி,
ஸ்திரப்படுத்தி, பெலப்படுத்தி,
நிலை நிறுத்த வல்லவர்.
உமக்கே மகிமையும்,
வல்லமையும்
சதாகாலங்களிலும்
உண்டாயிருப்பதாக ஆமென்.

லூக். 18:13, சங்51:1,2,7,9,10,143:10,1பே.5:10,11

*(உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் இன்று ஏதாவது பாவம் செய்திருந்தால் அதையும் அறிக்கையிடுங்கள். நாம் அறிக்கையிட்டால், நம்மை மன்னித்து சுத்தம் செய்ய இயேசு கிறிஸ்து ஆவலாயிருக்கிறார். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்.)

நன்றி கூறுதல்

என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி, என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி, அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. ஆண்டவரே நீர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் உமக்கு நான் என்ன கைமாறு செய்வேன்? ஆண்டவரே, உமக்கு என் பொருத்தனைகளை நிறைவேற்றுவேன். நான் உமக்கு நன்றிபலி செலுத்தி உமது நாமத்தைத் தொழுதுகொள்வேன்.

சங்.103:1, 2.116:12,17.

ஆண்டவரே, நீர் உன்னதத்தில் உறைபவர், எனினும் நலிந்தோரை கண்ணோக்குகின்றீர். நான் துன்பத்தின் நடுவில் நடந்தாலும், என் உயிரைக் காக்கின்றீர். நீர் வாக்களித்த அனைத்தையும் எனக்கெனச் செய்து முடிப்பீர். ஆண்டவரே, என் முழு மனதுடன் உமக்கு நன்றி செலுத்துகிறேன்.

சங். 138:6-8,1.

ஆண்டவரே, நீர் இரக்கமும், கனிவும் உடையவர். எளிதில் சினம் கொள்ளாதவர். பேரன்பு கொண்டவர். நீர் எல்லோருக்கும் நன்மை செய்பவர். எங்களுடைய தாழ்வில் நீர் எங்களை நினைத்தருளியதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன்.

சங். 145:8,9 136:23.

ஆண்டவரே, நீர் நல்லவர்,
உமது செயல்கள் யாவும் இரக்கச்
செயல்களே. உம்மை நோக்கிக்
கூப்பிடும் யாவருக்கும் நீர்
அருகில் இருக்கின்றீர். உமக்கு
அஞ்சி நடப்போரின் விருப்பத்தை
நீர் நிறைவேற்றுகிறீர். ஆதலால்
ஆண்டவரே நீர் உருவாக்கிய
யாவும் உமக்கு நன்றி செலுத்தி,
உம் திருப்பெயரை என்றும்
எப்பொழுதும் போற்றுவதாக.
ஆமென்.

சங். 118:1; 145:17-19,21.

(இன்று நீங்கள் பெற்ற
நன்மைகள் இருந்தால்
அதற்காகவும் நன்றி செலுத்துங்கள்.)

வேண்டுதல்

கர்த்தாவே, உமது செவியைச்
சாய்த்து என் விண்ணப்பத்தை
கேட்டருளும். என் தேவனே,
உம்மை நம்பியிருக்கிற உமது
அடியேனை நீர் இரட்சியும்.
ஆண்டவரே எனக்கு இரங்கும்.
நாள்தோறும் உம்மை நோக்கிக்
கூப்பிடுகிறேன். உமது
அடியேனுடைய ஆத்துமாவை
மகிழ்ச்சியாக்கும்.
சங். 86:1-4.

கர்த்தாவே, உமது வழியை
எனக்குப் போதியும். நான் உமது
நாமத்திற்குப் பயந்திருக்கும்படி
என் இருதயத்தை
ஒருமுகப்படுத்தும். எனக்கு
உணர்வைத் தாரும். அப்பொழுது
நான் உமது

வேதத்தை பற்றிக் கொண்டு என்
முழு இருதயத்தோடும் அதைக்
கைக்கொள்ளுவேன். உமது
கற்பனைகளின் பாதையில்
என்னை நடத்தும். நான் அதில்
பிரியமாயிருக்கிறேன். என்
இருதயம் பொருளாசையைச்
சாராமல், உமது சாட்சிகளைச்
சாரும்படி செய்யும். மாயையைப்
பாராதபடி நீர் என் கண்களை
விலக்கி, உமது வழியில் என்னை
உயிர்ப்பியும்.
சங். 86:11 119:34-37

கர்த்தாவே, என்
நோய்களையெல்லாம்
குணமாக்கி, என் பிராணனை
அழிவுக்கு விலக்கி மீட்டருளும்,
உமது கிருபையினாலும்,
இரக்கங்களினாலும்
என்னை

முடிசூட்டி, நன்மையினால் என்
வாயைத் திருப்தியாக்கும்.
கழுகுக்குச் சமானமாய் என் வயது
திரும்ப இளம் வயது போலாகச்
செய்தருளும். ஆண்டவரே,
முதிர் வயதில் என்னைத்
தள்ளிவிடாமலும், என் பெலன்
ஒடுங்கும் போது என்னைக்
கைவிடாமலும்
இருப்பீராக.
சங். 103:3-5 71:9.

கர்த்தாவே, எங்கள் எல்லைகளைச்
சமாதானமுள்ளவைகளாக்கி
நல்ல ஆகாரத்தினால் எங்களைத்
திருப்தியாக்கும். கர்த்தாவே,
ஒடுக்கப்பட்டவர்களுக்கு
நியாயஞ்செய்தருளும்.
பசியாயிருக்கிறவர்களுக்கு
ஆகாரம் கொடுத்தருளும்.

கட்டுண்டவர்களை
விடுதலையாக்கியருளும்.
மடங்கடிக்கப்பட்டவர்களைத்
தூக்கிவிடும். பரதேசிகளைக்
காப்பாற்றும்.
திக்கற்ற பிள்ளைகளையும்,
விதவைகளையும் ஆதரித்தருளும்.
சங். 147:14, 146:7,9.

கர்த்தாவே நாங்கள் சகலவித
நற்கிரியைகளுமாகிய கனிகளைத்
தந்து, உம்மை அறிகிற அறிவில்
விருந்தியடைந்து, உமக்குப்
பிரியமான வழியில் நடந்து
கொள்ள உதவி செய்தருளும்.
தேவனே, நீர் எங்களை முற்றிலும்
பரிசுத்தமாக்கி, எங்கள் ஆவி,
ஆத்துமா, சரீரம் முழுவதும்
உமது வருகையின் போது

குற்றமற்றதாயிருக்கும்படி
காத்தருளும்.
கொலோ. 1:10, Iதெச 5:23.

வழுவாதபடி எங்களைக்
காக்கவும், உமது மகிமையுள்ள
சந்நிதானத்திலே மிகுந்த
மகிழ்ச்சியோடே எங்களை
மாசற்றவர்களாய் நிறுத்தவும்
வல்லமையுள்ளவராகிய எங்கள்
இரட்சகரான தேவனுக்குக்
கனமும், மகத்துவமும்,
வல்லமையும், அதிகாரமும்
இப்பொழுதும் எப்பொழுதும்
உண்டாவதாக. ஆமென்.
யூதா. 24,25

இன்று உங்களுக்கு தேவைகள் இருந்தால்
அதற்காகவும் வேண்டுதல் செய்யுங்கள்.

அனுதின வல்லமை

இப்பொழுது ஜெபத்தைப் பற்றி கற்றுக் கொண்டீர்கள். நமது அன்றாட தேவைகளுக்கும் உதவிகளுக்கும் கிறிஸ்து இயேசுவையே நாம் சார்ந்து இருக்க வேண்டும். ஆகவே உங்கள் சிந்தை முழுவதும் அவர் மேலேயே இருப்பதற்கு பின்வரும் பகுதி உதவியாக இருக்கும்.

பாவ அறிக்கை

ஆதியும் அந்தமுமானவரே, எல்லாவற்றையும் படைத்து ஆள்பவரே, எனது பரம தந்தையே, உம்மையே நான் வாழ்த்துகிறேன், வணங்குகிறேன், ஆண்டவரே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும். நான் இயல்பாகவே ஒரு பாவி, மேலும் நீர் நியமித்த ஒழுங்கு முறைகளை மீறியதால் நான் பாதகனானேன். என்னுடைய பாவத்தின் பரிகாரத்திற்காக உமது குமாரன் இயேசு கிறிஸ்துவை சிலுவையில் மரணமடையச் செய்தீர். என் பாவத்திற்கான தண்டனையை அவர் ஏற்றுக்கொண்டதால் நீர் என் பாவத்தை மன்னிக்க தயை மிகுந்தவராய் இருக்கிறீர். ஆகவே நீர் கிருபையாக என் பாவங்களை மன்னியும். நீரே தூய உள்ளத்தை என்னிலே படைத்து, என் ஆவியை புதுப்பித்தருளும். நீர் என்னை சீர்படுத்தி, உமது தூய வழியில் என்னை நடத்தும், நீரே எனது தஞ்சம்.

விசுவாச அறிக்கை

உன்னதமான கர்த்தாவே, உமது கரங்களின் மறைவில் நான் இருக்கிறேன். சர்வ வல்லவரே, உமது கரம் என்னைப் பாதுகாக்கிறது. கர்த்தாவே, நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், உம்மையே நான் நம்பியிருக்கிறேன். நீர் என்னை மனிதரின் சூட்சிக்கும், கேடு உண்டாக்கும் நோய்களுக்கும் தப்புவிப்பீர். உமது கரங்களால் என்னை மிகுந்த கரிசனையோடு மூடிக்கொள்வீர். நான் உமது கரங்களுக்குள் பாதுகாப்பாக இருப்பேன். இரவில் ஏற்படும் தீமைகளுக்கும், பகலில் ஏற்படும் ஆபத்துகளுக்கும், இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும் பகலில் ஏற்படும் அழிவுக்கும் நான் பயப்படமாட்டேன். என்னைச் சுற்றி அநேகர் ஆபத்துகளில் சிக்கிக் கொண்டாலும் ஒன்றும் என்னை அணுகாமல் நீர் பாதுகாப்பீர். நான் அவைகளைக் கண்டு துன்மார்க்கரின் முடிவு இதுதான் என்று அறிந்து கொள்வேன்.

எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான
கர்த்தரை நான் உறைவிடமாகக் கொண்டதால்
ஆபத்து எனக்கு நேரிடாது; அழிவு என்
கூடாரத்தை அணுகாது.
எனது வழிகளிலெல்லாம் என்னைக் காக்கும்
படிக்கு நீர் உமது தூதர்களுக்கு கட்டளையிடுவீர்;
ஆகவே என் பாதங்கள் கல்லில் இடறாதபடி
அவர்கள் என்னை தங்கள் கரங்களில்
ஏந்திக்கொண்டு செல்வார்கள்.
காட்டு மிருகங்களும் விஷப்பூச்சிகளும்
என்னைச் சேதப்படுத்தாதபடிக்கு நான்
அவைகளை மேற்கொள்வேன்.
நான் உம்மிடம் வாஞ்சையாயிருப்பதால்
நீர் என்னைக் காப்பாற்றுவீர். நான் உம்மை
அறிந்திருப்பதால் நீர் என்னை உயர்ந்த
அடைக்கலத்தில் வைப்பீர்.
நான் உம்மிடம் மன்றாடும் போது நீர்
பதிலளிப்பீர். எனது ஆபத்தில்
என்னோடிருந்து என்னைத் தப்புவித்து.
எனக்குப் புகழ் உண்டாகச் செய்வீர்.
நீர் என்னை எல்லாத் தீங்குக்கும் விடுவித்து,
நீடிய ஆயுளை எனக்குக் கட்டளையிடுவீர்.
- சங்கீதம் 91.